(5) AMENDMENT TO SCHEDULE IV OF THE MADRAS DISTRICT MUNICIPALITIES ACT, 1920 (MADRAS ACT V OF 1920).

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" Whereas the Government of Madras have directed that, with effect from the school-year 1955–56, all poor pupils (whose parents' or guardians' annual gross income does not exceed Rs. 1,200) be exempted from the payment of school fees in elementary and secondary schools up to and inclusive of Form III and that the fee income lost by the managements of schools be made good to them in full from the State Funds;

And whereas it is considered that the remission of school fees which may be granted under rule 51 in Schedule IV to the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920), should be restricted to cases of poor pupils studying in Forms IV, V and VI in secondary schools under municipal councils;

Now, therefore, in pursuance of section 305-A of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920), this Assembly hereby approves the following draft rule, proposed to be made by the Governor of Madras under section 305, sub-section (1) of the said Act for amending Schedule IV to the said Act :—

DRAFT RULE.

In Schedule IV to the said Act, for the second proviso to sub-rule (1) of rule 51, the following proviso shall be substituted, namely :—

' Provided further that the Council may remit the whole or part of the fees of poor pupils in its secondary school or schools, in accordance with the provisions contained in rule 32 of the Grant-in-Aid-Code.'."

MR. SPEAKER : The hon. Member Sri K. Sattanatha Karayalar has given notice of an amendment. He may move it now. Then the motion and the amendment will be taken up for discussion.

SRI K. SATTANATHA KARAYALAR : Mr. Speaker Sir, I move that—

" 1. In the first paragraph of the preamble to the draft rule in line 2 delete the word ' poor ' and the brackets and words and figure in lines 2 to 4 ' (whose parents ' or guardians ' annual gross income does not exceed Rs. 1,200) '.

2. In the first paragraph of the preamble to the draft rule in line 5 for the words ' Form III ', insert the words ' Form VI '."

SRI K. RAMACHANDRAN : I second the amendment, Sir.

MR. SPEAKER : Amendment moved—

" 1. In the first paragraph of the preamble to the draft rule in line 2 delete the word ' poor ' and the brackets and words and figure in lines 2 to 4 ' (whose parents ' or guardians ' annual gross income does not exceed Rs. 1,200) '.

2. In the first paragraph of the preamble to the draft rule in line 5 for the words ' Form III ', insert the words ' Form VI '."

The motion as well as the amendment are before the House for discussion.

*SRI K. SATTANATHA KARAYALAR : கனம் தலைவர் அவர்களே, டிஸ்டிரிக்ட் முனிசிபாலிடீஸ் ஆக்டுக்குக் கொண்டுவந்துள்ள திருத்தத்தில், முதல் பகுதியில் ரூ. 1,600-க்கு மேற்படாத வருமானம் உடையவர்களின் குழந்தைகளுக்கு மாத்திரம்தான் இந்த இலவசக் கல்விச் சலுகை கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், குறிப்பாக மூன்றாவது பாரம் வரையில்தான் இந்தச் சலுகை தற்போது கொடுக்கப்படுவதாகச் சொல்லப்பட்டுள்ளது. என்னுடைய திருத்தத்தின் மூலம் நான் கோருவது என்னவென்றால், சாதாரணமாக அரசியல் சட்டத்தில்கூட 10-வது வகுப்பு வரை மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கும்போது, . . .

THE HON. SRI C. SUBRAMANIAM: எந்த விதியில் சொல்லப்பட்டிருக்கிறது ?

SRI K. SATTANATHA KARAYALAR : **In the Constitution it is said that free education should be given up to the age of fourteen. It does not necessarily mean that he should be in the First Class at that age.**

பதினான்காவது வயது வரையில் உள்ள காலத்தை ஆரம்பக் கல்வியை முடிப்பதற்கான காலமாக கனம் மந்திரி அவர்கள் கருதினால், நமது தமிழ் மாணவர்களின் அறிவுத் திறமையைப்பற்றி அவர்கள் தவறான கருத்துக் கொண்டிருக்கிறார்களோ என்று நான் ஐயப்படுகிறேன். இந்த இலவசக் கல்விச் சலுகை மூன்றாவது பாரம் வரையில்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி ஜில்லாவில் முன்பு திருவிதாங்கூர் ராஜ்யத்தில் இருந்து இப்போது நமது ராஜ்யத்தில் இருக்கும் செங்கோட்டைத் தாலூகாவில் மூன்றாவது பாரம் வரையில் மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி போதிக்கப்பட்டுவருகிறது. இந்தத் திருத்தத்தைப் பார்க்கும்போது, என் போன்றவர்களுக்கு, ஒரு வேளை தற்போதுள்ள உரிமையும் பின்பு பறிபோய்விடுமோ என்ற அச்சம்தான் மேலெழுந்து வருகிறது. மூன்றாவது பாரம்வரை உள்ள இந்தச் சலுகை ஏழை மாணவர்களுக்கு மாத்திரம்தான் கொடுக்கப்பட்டு உள்ளது. அதோடு மாத்திரமல்லாமல், இந்தத் திருத்தத்தின் விளைவாக இந்த ராஜ்யத்தில் மொத்தமாக உள்ள 61 ஜில்லா முனிசிபாலிட்டிகளுக்கு மாத்திரம்தான் இந்தச் சலுகை கொடுக்கப்படும். மேலும் ஒரு வேளை இதன் விளைவாக ரூ. 55 லட்சத்திற்கு மேலாக சர்க்கார் மானியம் கொடுக்க வேண்டி வரலாம். அது மாத்திரமல்லாமல், ஏற்கெனவே பின் தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காக சுமார் 13 ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்களுக்கும், சுமார் 294 முதல் தர பஞ்சாயத்துக்களுக்கும், சுமார் 5,045 இரண்டாம் தர பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களுக்கும் சில சலுகைகளை சர்க்கார் கொடுத்துவருகிறார்கள். செய்யப்போகும் திருத்தத்தின் விளைவாக அந்தச் சலுகைகளைப் பெறுபவர்களுக்கும் அவை நிரந்தரமாகக் கிடைக்காது. அப்படி இருக்க, ஜில்லா முனிசிபாலிட்டிகளுக்கு மாத்திரம் கொடுக்கும் அந்தச் சலுகைகளை பஞ்சாயத்துகளுக்கும் கொடுப்பது நலமாக இருக்கும். நகரத்திற்கும் நாட்டுப்புறத்திற்கும் பாகுபாடு செய்வதாக இந்த திருத்தம் அமைந்துள்ளது. ஒரு வேளை கனம் மந்திரி அவர்கள், டிஸ்டிரிக்ட் முனிசிபாலிட்டீஸ் ஆக்டில் குறிப்பாக இந்தத் திருத்தத்தை மாத்திரம் செய்கிறோம் என்று சொல்லலாம். அப்படிக் கூறினால் அதை நான் மிக மிக வரவேற்கிறேன். எல்லா மாணவர்களுக்கும் இலவசக் கல்விச் சலுகையை அளிக்கும் விஷயத்தில் சர்க்காருடைய கொள்கை என்ன என்று தெரியவில்லை. முதல் பகுதியில் மூன்றாவது திருத்தம்

27th June 1957] [Sri K. Sattanatha Karayalar]

சரியான பலன் அளிக்காது ; ஏனென்றால் ஏழை மாணவர்களுக்கான ஒரு சில சலுகைகளை பணமுள்ளவர்களும் செல்வாக்குள்ளவர்களும் உத்தியோகஸ்தர்களிடமிருந்து வாங்கிக்கொள்கிறார்கள். என்னுடைய திருத்தத்தினால், அவர்கள் அப்படி வாங்கிக்கொள்ளமுடியாத நிலைமை ஏற்பட்டு, எல்லா மாணவர்களும் இலவசமாகப் படிக்கக்கூடிய நிலைமை ஏற்படும்.

அடுத்தப்படியாக, என்னுடைய இரண்டாவது திருத்தத்தின் நோக்கம் பத்தாவது வகுப்பு வரையில் எல்லா மாணவர்களுக்கும் இலவசக் கல்வி கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதாகும். அப்படிச் செய்தால், எல்லா மாணவர்களுக்கும் நன்மையாக இருக்கும் ; மேலும் கடைக்கோடியில் உள்ள மக்களும் ஓரளவு முன்னுக்கு வருவதற்கு சௌகரியமாக இருக்கும். இந்த ஏற்பாட்டினால் மிக அதிகமாகச் செலவு ஏற்படும் என்று எனக்குத் தோன்றவில்லை. ஏற்கெனவே கிராண்ட்-இன்-எய்ட் கோடின் படியும் எஜுகேஷனல் ரூல்ஸின் படியும் நமது சர்க்கார் கல்விக்கு மிகத் தாராளமாகப் பணம் வழங்கி வருகிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அவைகளில் பலவிதமான கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அந்தக் கட்டுப்பாடுகளை நீக்குவதற்காக இப்படிப் பொதுப்படையாக எல்லா மாணவர்களுக்கும் சலுகை கிடைக்கக்கூடிய முறையை அங்கீகரித்தால் அது மிகவும் நன்மை பயக்கும் என்பதால் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறேன். இதை சபை ஏற்றுக்கொள்ளும், கனம் மந்திரி அவர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நன்னம்பிக்கையுடன் இதை சபைமுன் வைக்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் இந்தத் திருத்தத்தின் கருத்தைப் புரிந்துகொண்டதாக நான் சொல்ல முடியாது ; புரிந்துகொண்டிருந்தால் இந்தத் திருத்தத்தை அவர்கள் பிரேரேபித்திருக்க மாட்டார்கள். சர்க்கார் உத்திரவின் படி ஒன்று முதல் மூன்றுவது பாரம் முடிய உள்ள வகுப்புகளில் படிக்கும் ஏழை மாணவர்களுக்கு சம்பளச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் உத்திரவாக இருக்கும் காரணத்தால் சர்க்கார் பள்ளிகளில் இது அமல் நடத்தப்படுகிறது. சாதாரணமாக தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்கள் விஷயத்தில், அங்கும் இந்தச் சலுகை கொடுக்கப்படுவதற்கும், அதன் விளைவாக அவர்களுக்கு ஏற்படும் வருமானக் குறைவிற்கு நஷ்ட ஈட்டுப் பணத்தை அவர்கள் சர்க்காரிடம் கோரிப் பெறுவதற்கும் கிராண்ட்-இன்-எய்ட் கோடில் அவசியமான திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. அத்துடன், இப்போது முனிசிபாலிட்டிகளும் சில பள்ளிக்கூடங்களை நடத்துகின்றன. அந்தப் பள்ளிக்கூடங்களில் சம்பளம் வசூலிப்பது அந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ள விதிகளைப் பொறுத்திருக்கிறது. இப்போதுள்ள விதிகளின் பிரகாரம் 10 சத வீதம் மாணவர்களுக்குத்தான் அவர்கள் அந்தச் சம்பளச் சலுகையைக் கொடுக்க முடியும். எல்லா ஏழை மாணவர்களுக்கும் அந்தச் சலுகையைக் கொடுப்பதற்கான ஏற்பாடு செய்வதற்கு இப்போதுள்ள விதிகளின் பிரகாரம் முனிசிபாலிட்டிகளுக்கு அதிகாரம் கிடையாது. ஆகையால், இப்போது செய்வதெல்லாம் மற்றப் பள்ளிகளில் இருக்கிற மாதிரி முனிசிபாலிட்டிப் பள்ளிக்கூடங்களிலும் சலுகை இருக்க வேண்டுமென்பதற்காகக் கொண்டுவரும் திருத்தமே யொழிய வேறொன்றும் கிடையாது. இப்போது, கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன திருத்தத்தை ஒப்புக்கொள்வதாக வைத்துக்கொள்வோம். அப்படியானால் விதி எப்படி இருக்கும் என்று படித்துக் காண்பிக்கிறேன்.

அவருடைய திருத்தத்தின்படி, **poor** என்ற வார்த்தையையும் **" whose parents ' or guardians ' annual gross income does not exceed Rs. 1,200 "** என்ற வார்த்தைகளையும் விதியிலிருந்து நீக்கிவிடவேண்டும். அதாவது, **" Whereas the Government of Madras have directed that, with effect from the school-year 1955–56, all pupils be exempted from the payment of school fees in elementary and secondary schools up to and inclusive of Form III and that the fee income lost by the managements of schools be made good to them in full from the State Funds;"**

என்று விதி இருக்கும். அவருடைய திருத்தத்தின்படி **"...all pupils be exempted..."** என்று அர்த்தம் ஆகும். அதாவது அந்த வகுப்புகளில் படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் இலவசக் கல்விச் சலுகை அளிக்க வேண்டும் என்று அர்த்தமாகும். எல்லாருக்கும் சலுகை அளிக்க வேண்டுமென்றால் அதைச் சொல்ல வேண்டிய சமயம் இப்போது அல்ல. சபையில் பட்ஜெட் விவாதம் வரப்போகிறது. அப்போது அந்த யோசனையைச் சொன்னால் அதை விவாதிக்கலாம். அப்போது அதை ஆராய்ந்து முடிவுசெய்ய வேண்டியது சர்க்கார் கடமை. ஆகையால் இந்தத் திருத்தம் நல்லெண்ணத்துடன் கொண்டுவரப்பட்டிருந்தாலும்கூட அந்த நல்லெண்ணம் தவறான இடத்தில் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் வக்கீலாக இருக்கும் கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (ஒரு கனம் அங்கத்தினர் : வக்கீல் இல்லை) அவர் வக்கீலாக இருந்திருந்தால் இந்தத் தவறை செய்திருக்க மாட்டார்.

கனம் அங்கத்தினர் இந்தத் திருத்தத்தை வாபஸ் பெற்றுக்கொள்வது தான் நல்லது. திருத்தத்தைச் செய்யும்போது சட்டம் சரியான முறையில் அமைந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இந்தத் திருத்தத்தை ஒப்புக்கொண்டால் இந்தப் பிரேரேபணைக்கு அர்த்தமேயில்லாமல் போய் விடும். ஆகவே இந்தத் திருத்தத்தை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று கனம் அங்கத்தினர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Is the hon. Member withdrawing his amendment?

SRI K. SATTANATHA KARAYALAR : புதிதாக சர்க்கார் பிறப்பித்திருக்கும் உத்திரவை ஒழுங்கு படுத்துவதற்காக இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளதாக நான் கருதலாமா? **Is it just to regularise the order the Government have already passed? Am I to understand like that?**

THE HON. SRI C. SUBRAMANIAM : "ரெகுலரைஸ் பண்ணுவதற்காக" என்றால், இப்போது ஏதோ "இர்ரெகுலாரிடி" இருப்பது போலவும் அதை "ரெகுலரைஸ்" பண்ணுவது போலவும் அர்த்தமாகும்.

இப்போது சர்க்கார் போட்டுள்ள உத்தரவு முனிசிபாலிட்டிகள் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லாது. காரணம், முனிசிபாலிடிகள் விஷயத்தில் முன்பே ஒரு சட்டமும் அதன் கீழ் விதிகளும் இருக்கும்போது சர்க்கார் போடும் உத்திரவு அந்தச் சட்டத்திற்கோ அதன் கீழுள்ள விதிகளுக்கோ புறம்பானதாக இருந்தால், முன்பிருந்த சட்டத்திற்கும் அதன் விதிகளுக்கும் உட்பட்டுத் தான் அரசாங்கம் நடக்கவேண்டுமே தவிர அவற்றை மீற அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது. ஆகையால் மற்ற இடங்களில் இருப்பதைப் போலவே முனிசிபாலிட்டிகள் நடத்தும் பள்ளிக்கூடங்களிலும் சம்பளச் சலுகை இருப்பதற்குத் தான் இந்த விதியை நாங்கள் வகுக்கிறோம்.

இன்னொரு விஷயத்தைப் பற்றி நான் சொல்ல மறந்து போய் விட்டேன். இப்பொழுது கன்யாகுமாரியிலுள்ள சலுகைகள் பாதுகாக்கப்படுமா என்று கனம் அங்கத்தினர் பயப்பட்டார். அப்படிப்பட்ட பயத்திற்கு இடமே இல்லை. இப்பொழுது மதருஸ் டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிட்டி ஆக்ட்டுக்குத் தான் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது. கன்யாகுமரியில் என்ன சட்டங்கள் இருக்கின்றன, என்ன விதிகள் இருக்கின்றன அவைகளைப் பார்த்து விட்டுத் தான் அதன் பிறகு அங்கும் மாறுதல்களைக் கொண்டு வரவேண்டும். முதலில் கன்யாகுமரியில் என்ன என்ன சட்டங்கள் இருக்கின்றன, அவைகள் நல்ல முறையில் இருக்கின்றனவா, அவைகளுக்கு ஏதாகிலும் திருத்தங்கள் அவசியமா என்பதை முதலில் பரிசீலனை செய்த பின் தான் அங்கு மாறுதல்களைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்படும். அங்கு ஏற்கெனவேயுள்ள சட்டங்களும் விதிகளும் இப்பொழுது மதருஸில் இருக்கக் கூடியவைகளைவிட அதிகப்படியாக நல்லது அளிக்கக் கூடியதாக இருக்கின்றனவா இல்லையா என்பதை முதலில் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. அவைகளைப்பற்றி பரிசீலனை செய்து பார்த்த பின் தான்

27th June 1957] [Sri C. Subramaniam]

அங்கு மாறுதல்கள் கொண்டு வரப்படும். முதலில் அங்குள்ள சட்டங்களும் விதிகளும் முன்னேற்றமுள்ளவைகளாக இருக்கின்றனவா என்பதைப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. அதன் பின் அங்கு மாறுதல்களைச் செய்ய வேண்டுமானால் அதனுடைய செலவு என்ன என்பதையும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

*Sri K. SATTANATHA KARAYALAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த திருத்தத்தின் நோக்கம் நல்லவையாக இருப்பினும் அது எந்த சூழ் நிலையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்காமல் ரொம்பவும் சாதுர்யமாக பதில் சொல்லி விட்டார். இந்தத் திருத்தம் கொண்டுவரப்படவேண்டிய அவசியம் என்ன, அதன் கருத்து என்ன என்பதை அவர்கள் தெரிந்து கொண்டு அதற்கு பதில் சொல்லியிருந்தால் ரொம்பவும் நன்மையாக இருந்திருக்கும். இதன் கருத்தை தெரிந்து கொள்ளாமல் ஏற்றுக்கொள்ளாமல் அவர் பதில் சொல்லிவிட்டார். எந்த சூழ்நிலையில் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டு அதற்கு பதில் சொல்லியிருந்தால் நலமாயிருந்திருக்கும். ஆனால் இந்த விஷயத்தைப்பற்றி பின்னால் கவனிக்கலாம் என்று மட்டும் சொல்லுகிறார். இந்தத் திருத்தத்தின் கருத்தைத் தெரிந்து கொண்டு எந்த சூழ் நிலையில் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று தெரிந்து கொள்ளாமல் பதில் சொல்லியிருப்பினும் டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிட்டி ஆக்ட்டின் கீழ் கொண்டு வரப்பட்டாலும் அப்படிக் கொண்டு வரவேண்டாம் என்று நான் சொல்லவில்லை என்பதை தெரிவித்துக்கொண்டு அந்த அடிப்படையில் நான் திருத்தத்தை பின் வாங்கிக் கொள்ளுகிறேன்.

The amendments were by leave, withdrawn.

Mr. SPEAKER : The question is—

" Whereas the Government of Madras have directed that, with effect from the schoool-year 1955–56, all poor pupils (whose parents' or guardians' annual gross income does not exceed Rs. 1,200) be exempted from the payment of school fees in elementary and secondary schools up to and inclusive of Form III and that the fee income lost by the managements of schools be made good to them in full from the State Funds;

And whereas it is considered that the remission of school fees which may be granted under rule 51 in Schedule IV to the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920), should be restricted to cases of poor pupils studying in Forms IV, V and VI in secondary schools under municipal councils;

Now, therefore, in pursuance of section 305-A of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920), this Assembly hereby approves the following draft rule, proposed to be made by the Governor of Madras under section 305, sub-section (1) of the said Act for amending Schedule IV to the said Act :—

Draft Rule.

In Schedule IV to the said Act, for the second proviso to sub-rule (1) of rule 51, the following proviso shall be substituted, namely :—

' Provided further that the Council may remit the whole or part of the fees of poor pupils in its secondary school or schools, in accordance with the provisions contained in rule 32 of the Grant-in-Aid-Code.' "

The motion was put and carried.